பெரிய புராணம்

இளையான்குடிமாற நாயனார் புராணம்

இளையான்குடி மாறரும் அவர் மனைவியாரும் மெய்யடியார்கட்கு நல் விருந்தளிக்கும் நற்றொண்டினர். வறுமைக் காலத்தும் மனம் சுருங்குதலின்றி விருந்தென்னும் வேள்வி புரிந்தவர், ஈரநெல் முளையை வாரிக் கொண்டு வந்து மாறர் கொடுக்க அம்மையாரும் (மனைவி) கைவன்மையால் திருவமுதாக்கினார். தபோதனர் வடிவில் வந்த இறைவனும் மனமகிழ்ந்து அருளினார், 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' என்னும் தனித்தமிழ் மறைக்கு எடுத்துக் காட்டாகும் நிலையில் மாறர் தம்பதியினர் வாழ்க்கை அமைந்தது சிறப்பாகும். ஏவலார் குழலாள் தன்னோடு இடப வாகனத்தில் காட்சி தந்த இறைவன், இருவருக்கும் சிவலோக பதவி அளித்தார் .

இளையான் குடிமாற நாயனார் புராணம்

1) அம்பொ னீடிய அம்ப லத்தினி லாடு வாரடி சூடுவார்
தம்பி ரானடி மைத்தி றத்துயர் சால்பின் மேன்மைத் ரித்துள்ளார்
நம்பு வாய்மையி னீடு சூத்திர நற்கு லஞ்செய்த வத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கி னாரிளை யான்கு டிப்பதி மாறனார்.

2) ஏரின் மல்கு வளத்தி னால்வரு மெல்லை யில்லதொர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யாரடி யார்தி றத்துநி றைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடுப யன்கொள்வார் .

3) ஆர மென்பு புனைந்த வையர்த மன்ப ரென்பதொர் தன்மையான்
நேர வந்தவர் யாவராயினு நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள்கு வித்து நினறுசெ விப்புலத்
தீர மென்மது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின்

4) கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம்விளக்கியே
மண்டு காதலின் ஆதி னத்திடை வைத்த குச்சளை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்திறத்தன வொப்பிலா
அண்டர் நாயகர் தொண்டி ரிச்சையினமுது செய்ய வளித்துளார் .

KTBS Not to be republished

5) ஆளு நாயக ரன்ப ரானவ ரளவி லாருள மகிழவே
நாளு நாளு நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையி னன்மையால்
நீளு மாநிதி யின்ப ரப்பு நெருங்கு செல்வநி லாவியெண்
தோளி னாரள கைக்கி ருத்திய தோழ னாரென வாழுநாள் .

6) செல்வ மேவிய நாளி லிச்செயல் செய்வ தன்றியு மெய்யினால்
அல்ல னல்குர வான போதினும் வல்ல ரென்றறி விக்கவே
மல்ல னீடிய செல்வ மெல்ல மறைந்து நாடொறு மாறிவந்
தொல்லை யில்வறு மைப்ப தம்புக வுன்னி னார்தில்லை மன்னினார் .

7) இன்ன வாறு வளஞ்சு ருங்கவு மெம்பி ரானிளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குத லின்றி யுள்ளன மாறியுந்
தன்னை மாறி யிறுக்க வுள்ள கடன்க டக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கையரா யினார் .

8) மற்ற வர்செயலின்ன தன்மைய தாக மாலய னானவக்
கொற்ற வேனமும் அன்ன முந்தெரி யாத கொள்கைய ராயினார்
பெற்ற மூர்வது மின்றி நீடிய பேதை யாளுட னின்றியோர்
நற்ற வந்தவர் வேட மேகொடு ஞால முய்ந்திட நண்ணினார் .

9) மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்ல மடைத்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன் .

10) ஈர மேனியை நீக்கி யிடங்கொடுத்
தார வின்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்னென்று .

11) நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசி றகவுற
அமைக்கு மாறெங்ங னேயணங் கேயென .

K.T.B.S Not to be republished

12) மாது கூறுவாள் மற்றொன்றுங் காண்கிலேன்
ஏதி லாருமி னித்தரு வாரில்லை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயலென்று .

13) செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நென்
மல்ல னீர்முளை வாரிக்கொ டுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகுமற்
றல்ல தொன்றறி யேனென் றயர்வுற .

14) மற்ற மாற்ற மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வ மெனப் பெரி துண்மகிழ்ந்
துற்ற காதலி னாலொருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத்தொ டங்குவார் .

15) பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்ப ணறிவருங் கங்குறான்
கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட்
டுருகு கின்றது போன்ற துலகெலாம் .

16) எண்ணு மிவ்வுல கத்தவர் யாவருந்
துண்ணெ னும்படி தோன்றிமுன் றோய்ந்திடில்
வண்ண நீடிய மைக்குழம் பாமென்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து .

17) உள்ள மன்பு கொண் டுக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகழ் போயினார்
வள்ள லாரிளை யான்குடி மாறனார் .

18) காலினாற்றட விச்சென்று கைகளாற்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி யிடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர் .

19) வந்தபின் மனைவி யாரும் வாய்தலி னின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரிற் சேற்றினை யலம்பி யூற்றி
வெந் தழ லடுப்பின் மூட்ட விறகில்லை யென்ன மேலோர்
அந்தமின் மனையி னீடு மலக்கினை யறுத்து வீழ்ந்தார் .

KTBS Not to be republished

20) முறித்தவை யடுப்பின் மாட்டி முளை வித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் னரிசி யாக்கி வாக்கிய வுலையிற் பெய்து
வெறுப்பிலின் னடிசி லாக்கி மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கினி யென்செய் கோமென் றிறைஞ்சினார் கணவனாரை .

21) வழிவரு மிளைப்பி னோடும் வருத்திய பசியி னாலே
அழிவுறு மைய னென்னு மன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க .

22) மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரந்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினை வினாற் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று .

23) கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
இணையிலா தவரை யீண்ட வமுதுசெய் விப்போ மென்ன
உணர்வினா லுணர வொண்ணா வொருவரை யுணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங் கவர்துயி லகற்ற லுற்றார் .

24) அழுத்திய விடரு ணீங்கி யடியனே னுய்ய வென்பால்
எழுந்தருள் பெரியோ யீண்ட வமுதுசெய் தருள்கவென்று
தொழும்பனா ருரைத்த போதிற் சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாகுந் தொண்டருந் திகைத்து நின்றார் .

25) மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் றான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோ டிடபவ கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி .

26) அன்பனே யன்பர் பூசை யளித்தநீ யணங்கி னோடும்
என்பெரு முலகை யெய்தி யிருநிதிக் கிழவன் றானே
முன்பெரு நிதிய மேந்தி மொழிவழி யேவல் கேட்ப
இன்பமார்ந் திருப்பீ ராமென் றருள் செய்தா னெவர்க்குமிக்கான் .

KTBS Not to be republished

நூல்குறிப்பு :

'உலகெலாம்' என்னும் திருமொழியைச் சேக்கிழார் பெருமானுக்குத் தில்லை அம்பலவாணர்பாடும் அருள்முதலாகக்கொடுத்தருள திருத்தொண்டர்மாக்கதை எனவும் சுட்டப்படுகின்ற ' பெரியபுராணம் ' சேக்கிழார் பெருமானால் இயற்றப்பட்டது. அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றியும் ஒன்பது தொகையடியார்களைப்பற்றியும்பாடப்பட்டநூலாகும்.இந்நூல்பன்னிரண்டாம் திருமுறையாகத் திகழுகின்றது. சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை , நம்பியாண்டார் நம்பிபாடிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய நூல்களை முதல் நூலாகவும் வழிநூலாகவும் கொண்டு இயற்றப்பட்டது, இது திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் ஈறாக அமையும் பதின்மூன்று சருக்கங்களைக் கொண்டது.

ஆசிரியர்குறிப்பு :

அருண்மொழித்தேவர் என்ற இயற்பெயரைக் கொண்ட சேக்கிழார் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இரண்டாம் குலோத்துங்க சோழன் (அநபாயர்) உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டத்தினை வழங்கி இவரைமுதலமைச்சராக ஆக்கிக் கொண்டார். அரசரின் வேண்டுகோளிற்கிணங்க,சேக்கிழார் அடியார்களின் வரலாற்றினை விரித்து, ஒரு பெருங்காப்பியமாக-பெரிய புராணமாகச் செய்தருளினார். 4286 பாடல்களைக் கொண்ட இந்நூலினை இயற்றிய பெருமை இவரைச்சாரும்.

கருத்துரை

1) அழகிய பொன்னினால் நீடிய அம்பலத்திலே ஆடுகின்ற கூத்தரது திருவடிகளை எப்போதும் சிரத்திற்சூடிக்கொள்பவர்,சிவபெருமானின் அடிமைத் திறத்திலே உயர்ந்த சால்பினாலுளதாகிய மேன்மை தம்மதாகத் தரித்து வாழ்பவர். நம்பிக்கைக்குரியதாகிய நீடிய சூத்திர நற்குலம் செய்த தவக்காரணமாக அவதரித்து இவ்வுலகத்தை விளக்கம் செய்தார். இளையான்குடியென்னும் வதியிலேஅவதரித்த மாறன் என்ற பெயருடைய பெரியவர்.

2) ஏர்த் தொழிலால் நிறைந்து பெருகும் உழவு வளங்களினாலே வரும் உணவும் அவை கொண்டு ஆக்கப் பெறும் அளவில்லாத பிற செல்வமும் கங்கை தங்கிய சடையாரடியவர்கள் திறத்திலே நிறைந்ததாகிய சிறப்பினின்

KTB Not to be republished

மிக்க அன்பினது மேன்மை திருந்தும்படி நிலைத்த மனமும் உலகிலே வளர்ந்து நிலவுமாறு விரும்பி, அவற்றைத்தாம் பெற்றதனாலாகிய நீடிய பயனை அடைவாராய்.

3) ஆரமும் எலும்பும் அணிந்த ஐயரது அன்பர்கள் என்ற ஒரே தன்மையினை உட்கொண்டு, அதுவே காரணமாக வைத்து முன்னே வந்தவர்கள் யாவரேயாயினும் உறுதியாகி நிலைத்த புத்திகூர வந்து எதிர்கொண்டு அழைத்துக் கைகுவித்து எதிரே வணக்கமாக நின்று அவர்கள் கேட்குமாறு குளிர்ந்த துன்பமான இனிய மொழிகளை அவர்கள் அன்பு கொள்ளுமாறு சொல்லி அதன்பின்.

4) அவர்களைத் தமது மனைக்குளே அழைத்துக் கொண்டு வந்து புகுந்து, விளங்குகின்ற அவர்களின் திருவடிகளை விளக்கி, மிகுந்த ஆசையினாலே ஆசனத்தில் எழுந்தருளுவித்து அருச்சித்து அதன்பிறகு நான்கு விதத்தில் செய்த ஆறு சுவையுணவுகளையும் ஒப்பிலாத சிவபெருமானடியவர்களின் கையில் அமுது செய்தருளுமாறு கொடுத்துள்ளார்.

5) எல்லா உயிர்களையும் தமக்கு ஆளாக உடைய இறைவனது அன்பராயினார்கள் அளவில்லாதவர்கள் மனமகிழ்ந்து ஒவ்வொரு நாளும் பெருகிக்கூடி வந்து திருவமுது செய்து இவருடைய அன்பினை அனுபவித்த தன்மையின் பயனாகிய நன்மையினாலே, நீளும் பெருகும் செல்வங்களின் பரப்பும் நெருங்குசெல்வங்களும் நீடித்துப் பெருக்கெடுக்க எண்டோளாராகிய சிவபெருமான் அளகாபுரியினை ஆளும்படி அமைத்த தம் தோழனாகிய குபேரனே இவர் என்று சொல்லும்படி நாயனார் வாழ்ந்து வருகின்ற நாளிலே.

6) செல்வங்கள் மிகுந்திருக்கும் காலத்திலே இச்செய்கைகள் செய்வதன்றும் மெய்யினாலே துன்பம் தரும் தரித்திரம் வந்த காலத்திலும் இச்செயல் செய்ய இவர் வல்லவராவர் என்ற உண்மையை உலகிற்கு அறிவிக்கும்பொருட்டு, செழித்து நீடிவந்த அச்செல்வங்கள் மெல்ல மறைந்து போய் நாள்தோறும் மாறிவந்து,பின் விரைவிலே வறுமையாகிய நிலை வந்து சேருமாறு தில்லையில் மன்னிய இறையனார் திருவுள்ளம் செய்தனர்.

7) இப்படியாகத் தம் செல்வங்கள் சுருங்கிய போதிலும் நமது பெருமானும் இளையான் குடியின் தலைவருமாகிய மாறனார் மனநிலை சிறிதும் சுருங்காமல் நின்று, தம்மிடம் இருப்பனவற்றை மாற்றியும் தன்னை

மாறிக்கொடுக்கத்தக்கனவாகிய கடன்களை வாங்கியும் பின்னும் முன்னால் செய்துவந்த ஒப்பற்ற அடியார் பூசையாகிய திருப்பணியிலே மேலும்முற்றிய நிலைமையை உடைவராயினார்.

8) மேலும் அந்நாயனாரின் செயல்கள் இத்தன்மையினவாகி நிற்க, விட்டுணுவும் பிரமனுமாகிய அந்த வெற்றியுடைய பன்றியும் அன்னமும் அறியாத கொள்கையினரான இறைவனார், இடப வாகனத்தை மேற்கொள்ளுவதுமில்லாமல், என்றும் நலமுடன் தம்முடன் நீடியுள்ள உமாதேவியார் உடனில்லாமல் ஒரு நல்ல தவசியாரின் திருவேடத்தினையே மேற்கொண்டு இவ்வுலகம் உய்யும்பொருட்டு எழுந்தருளினார்.

9) அவ்வாறு நண்ணிய காலமாகிய மழைக்காலத்தில் ஒரு நாளிரவிலே உறக்கமின்றி விழித்திருந்து வேறு ஓராதரவும் இல்லாமையினாலே மீதூரும் பசி மேலும் அதிகரிக்கப் பெற்று, இல்லமடைந்த பின் வீட்டுக் கதவினைத் தாழிட்டு அடைத்த பின்னர், உற்ற பண்பினாலே, தேன் பொருந்திய மாலையணிந்த மாறனார் விருந்தினரை எதிர்கொண்டு வரவேற்றார் .

10) முதலில் அவரது திருமேனியில் ஈரம்போக்கிப் பின் அவர் எழுந்தருளியிருக்க ஓர்இடம் கொடுத்து, அதன்பின், அவர் மனநிறைவு கொள்ளுமாறு அமுதூட்டுதற்கு ஆசை கொண்டமையினால் தம் மனைவியை நோக்கி, ' இந்த தபோதனர் தீரப் பசித்துள்ளார். நாம் செய்வதென்னே' என்று பின்னரும் .

11) முன்னர் இங்கு நமக்கே உணவில்லை என்பதுண்மையேயாயினும் இமயமலை பெற்ற குலக்கொடியாகிய பார்வதியின் பாகற்கினியவர் தமக்கு நாம் இனிய உணவு தக்கபடி அமைத்தல் வேண்டும், ' அது செய்யும் வழி யாது ? அணங்கே ' என்று நாயனார் கூறினார்.

12) அதற்கு அம்மையார் விடை கூறுவாராய் அதற்கு வழி வேறொன்றும் காண்கிலேன்; பிறர் எவரும் இனிக் கொடுப்பவர்களில்லை. காலமும் கழிந்து நள்ளிரவாயிற்று; மற்றும் சென்று தேடக்கூடிய பிற இடங்களும் ஒன்றுமில்லை, தீவினையேனுக்கு இனியென்ன செயல் உள்ளது ? என்று சொல்லிப்பின்வரும்.

13) செல்லல் நீங்குமாறு " இன்று பகலில் வயலிலே விதைத்த செழிப்பானநீர் முளை நெல்லைத் தேவரீர் வாரிக்கொண்டு வந்து கொடுப்பீர்களானால், அடியேன் வல்ல வகையாலே அமுது சமைத்தலும்

Not to be republished

ஆகும்; இதனை தவிர்த்து வேறொரு வழியும் அறியேன் " என்று கூறி வருந்தினார் .

14) அம்மொழிகளை மனைவியார் சொல்லக் கேட்டதும் நாயனார் முன்னே தேடி வைத்திருந்த செல்வம் பெற்றவர் போன்று மிகவும் மனமகிழ்ந்து, பொருந்திய ஆசையினாலே சற்று நீருடைய தம் வயலிற்கு முளைவாரிக் கொண்டு வரப்போவதற்கு ஒருப்பட்டுத் தொடங்குவாராகி

15) வான வெளியிலே விளங்கப் பெருமழை பொழிதலாலே பக்கங்களும் இடைவெளியும் அறிய இயலாதபடி இருண்ட நள்ளிரவானது கருகிய மை போன்ற இருட்கூட்டம் தன் செறிவினை விட்டு உருகுகின்றது போன்று அந்நேரத்தே உலகெலாம் தோன்றியதாகவே

16) அதனை எண்ணுகின்ற இவ்வுலகத்தவர் வேறு எவரும் துண்ணென நடுக்கமுறும் வகைதோன்ற அவ்வாறு அவ்விருள் கண்முன்னே புலப்படும் காலத்தில் நீடிய வண்ணமுடைய மைக்குழம்பே இதுவாமென்று கொண்டு வெளிப்புறப்பட இயலாதபடி இருள் செறிந்த நடுயாமத்திலே .

17) தமது உள்ளத்தை அன்பானது தன் வசப்படுத்திக் கொண்டு ஊக்கம் தந்து செலுத்தத்தாம் வாரிக் கொணரும் முளை நெல்லைக் கொள்ளத்தக்கதொரு பெரிய இறை கூடையைத் தலைமேற் கவித்துக் கொண்டு குறி வழியே சென்று நீர்ப்பறவைகள் தூங்கும் அந்த வயலுக்குள் புகுமாறு வள்ளலாராகிய இளையான்குடி மாறனார் போனார் .

18) கால்களினாலே வழியைத் தடவி அறிந்து போய், வயலினுள்ளே மழை நீரின் வழியே மிதந்து ஒரு வழிச்சார்ந்த நெல் வெண்முளைகளைக் கையினாலே சோத்து வாரியெடுத்து இறைகூடை நிறையக் கொண்டு கூடையை மேலே தூக்கியெடுத்துத் தலையில் சுமந்து கொண்டவராய் மிக விரைவிலே வீட்டிற்குத் திரும்பி வந்தார் .

19) நாயனார் மீண்டும் வீட்டிற்கு வந்த பின், மனைவியார் மனைவாய்தலினின்று அவர் கொணர்ந்த நெல்முளை நிறைந்த இறை கூடையை வாங்கிக் கொண்டு, மனத்திலே மிக்க விருப்பமுடையராய், நெல் முளையில் படிந்திருந்த சேற்றை நீரினாலே கழுவி ஊற்றியபின் தம் நாயகரிடம், ' இந்நெல்லைப் பக்குவப்படுத்தற்கு அடுப்பில் எரிக்க விறகில்லை ' என்று கூற, மேன்மையுடையோராகிய நாயனார், அந்தமற்ற மனையிலே நீடிய கூரையை விறகின் பொருட்டுஅறுத்துத்தள்ளினார் .

KTBS Not to be republished

20) அவ்வாறு வெட்டி வீழ்த்திய அக்கூரைவரிச்சுகளை முறித்து அடுப்பிலே நெருப்பு மூட்டி அதில் நெல் முளைகளைப் பதமாக வறுத்த பின்னர், அதனை அரிசியாகக் குற்றியெடுத்துச் சுத்தம் செய்து, நீர் பெய்து வைத்த உலையிலே இட்டுச் சிறிதும் வெறுப்பிற்கிடந்தராத வண்ணம் இனிய ' அமுது சமைத்து வைத்து, அதன் பின்னர் மிகச்சிறந்த கற்பின் திறத்திலே மேம்பட்ட மனைவியார், ' கறி வகைகளுக்கு இனி என்ன செய்வோம் ? என்று சொல்லித் தம் கணவனை வணங்கினார் .

21) வழி வந்ததாலுளதாகும் இளைப்பினுடனே அதன் முன்னரே வருத்திய பசியினாலே எமது ஐயன் வருந்தும் " என்கின்ற அன்பினாற் கிளர்ந்து சென்று தம் கொல்லையிலே முளைக்க வைத்த குழிகளினின்றும் மேலே கிளம்பும் பருவமுறாத சிறிய இலைக்கறிப் பயிர்களைக் கையினால் தடவிப்பாசப் பழிமுதலை அறவே பறிப்பவர் போல அவற்றை வேரோடும் பிடுங்கி வந்து கறிக்காக மனைவியார் கையில் கொடுத்தார் .

22) மனைவியார் தம் கணவர் மனமகிழ்வுடன் தந்த கறிகளை இலைவேறுதண்டுவேறுமுதலியனவாக ஆய்ந்தெடுத்துக்கறிக்கானவற்றை நீரினால் கழுவி, அதற்கேற்ற தூய பாத்திரத்திலேயிட்டு முன் பழகிய தன் கைப்பழக்கத்தினாலே வெவ்வேறாகப் பலவகைக் கறிகளாகச் சமைத்துப் பழைய நினைவினால் உளதாகிய குறையை எண்ணி ஒருவாறு மனம் தேர்ந்து கொண்டு, திருவமுது வகைகளை முற்ற அமைத்து எழுந்து நின்றார்.

23) கணவரை நோக்கிக் கறிகளும் அமுதும் எல்லாம் சமைக்கப்பட்ட வகைகளைக் காட்டிப் பின், "ஒப்பற்றவரை நாம் இப்போதே விரைந்து அமுது செய்விப் போம் " என்று கூற, உணர்வினால் உணரமுடியாத ஒருவராகிய அவரை உணர்த்தும் பொருட்டு அவர் பக்கலில் அணைய முன்னே சென்று நின்றுகொண்டு நாயனார் அங்கே அவரைத்துயிலுணர்த்தலுற்றார் .

24) அடியேன் அழுத்தியுள்ள இடரினின்றும் நீங்கி உய்யும் பொருட்டாகவே என்பாற்கருணை கூர்ந்து எழுந்தருளியுள்ள பெரியோரே ! இங்கு விரைவிலே எழுந்து அமுது செய்தருளுக; என்று அடித்தொண்டு பூண்ட நாயனார் சொன்னபொழுது, அடியவராய் வந்த அவர் ஒரு சோதிப் பிழம்பாய் எழுந்து தோன்றவே, மனைவியும் நாயனாரும் திகைத்து நின்றார்

25) திருமாலுக்கும் பிரமனுக்கும் அரியவராகிய நாதர் கொண்டு எழுந்தருளி வந்த அடியார், வடிவமானது ஒரு சோதியாய்த் தோன்றவே, அது கண்டு மயங்கி நின்ற திருத்தொண்டர்க்கு உணர்த்தும் பொருட்டுச்

Not to be republished © BSE

சங்கரனார் தாமே மகிழ்ந்தவராகி, வாசனை பொருந்திய நீண்ட கூந்தலையுடைய உமாதேவியாருடனே இடப வாகனத்தின் மீது வெளிப்படக்காணும்படி எழுந்தருளி வந்து சீலம் பொருந்திய அடியார் பூசையினைச் செய்து வந்த நாயனாரைநோக்கி .

26) "அன்புடையவனே ! அன்பர்களுடைய பூசையினைச் சிறிதும் வழுவாது காத்துச் செய்து வந்த நீ, உன் மனைவியோடும் எம் பேருலகத்திலே சேர்த்து, குபேரன்தானே முன்னர்ப் பெரு நிதிகளை ஏந்தி, உன்சொல் வழியே ஏவல் கேட்டுநிற்க, இணையில்லாத பேரின்பம் நுகர்ந்து கொண்டு நித்தியமாய் வாழக்கடவாய் " என்றே யாருக்கும் மிக்காராகிய சிவபெருமான் அருளிச்செய்தார் .

அருஞ்சொற்பொருள் :

வளம்-செழுமை ; பத்தி-பக்தி ; மதுரப்பதம்-இனியமொழி ; அல்லல்-துன்பம் ; நல்குரவு-தரித்திரம் ; ஒல்லை-விரைவு ; மால்-விட்டுணு ; அயன்-பிரமன் ; மாரி-மழை ; தாரிப்பு-ஆதரவு ; அன்னம்-உணவு ; ஏதிலார்-பிறர் ; மல்லல்-செழிப்பு ; அமுது-உணவு ; இடா-இறைகூடை ; வெந்தழல்-எரி(நெருப்பு) ; அலக்கு-கூரை ; குறு பயிர்-சிறிய இலைக்கறிப் பயிர் ; கொழுநர்-கணவர் ; இருநிதி-பெருநிதி ; மொழி-சொல் .

பயிற்சி

I. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக .

1) சிவ பெருமான் எவற்றை அணிந்திருப்பார் ?

2) இளையான்குடிமாற நாயனார் எதனைத் திருப்பணியாகச் செய்து வந்தார் ?

3) சிவ பெருமான் எவ்வேடத்தில் இவ்வுலகம் உய்ய எழுந்தருளினார்?

4) இளையான்குடி மாறர் பெரிய இறைகூடையில் எதனைக் கொணர்ந்தார் ?

5) இளையான்குடி மாறரின் மனைவி அடுப்பிலே நெருப்பு மூட்ட எதனைப் பயன்படுத்தினார் ?

6) இளையான்குடி மாறர் கறிக்காக எதனைப் பறித்தார் ?

KTBS Not to be republished

II. மூன்று வாக்கியங்களில் விடை தருக .

1) இளையான்குடி மாறர் விருந்தினராகிய தபோதனரை வரவேற்று உபசரித்தமையைக் குறிப்பிடுக .

2) இளையான்குடி மாறர் தபோதனர் பசி தீர்க்கும் வழியினைக் கேட்க, அவர் மனைவி விடுத்த விடையினைக் கூறுக .

III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக .

1) இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில்வந்த சிவனுக்கு அமுது படைக்க, சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்களை விளக்குக.

IV. இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக .

1) ' ஏதிலாருமினித் தருவாருமில்லை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை '

2) 'குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப்பாசம்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்குநல்க'

மொழிப் பயிற்சி

1) சேர்த்து எழுதுக .

வரும் + எல்லை
மற்று + அவை
யாவர் + ஆயினும்
சுவை + திறன்

2) பிரித்து எழுதுக .

மல்லனீடிய
வளஞ்சுருங்க
மாரிக்காலம்
இன்னமுதூட்டு

3) எதிர்ச்சொல் தருக .

செல்வம்
அன்பு
நிறை
அந்தம்
இன்பம் .

TNTB&S Not to be republished